தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1975 நவம்பர் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Ex-Hindi Pandits working as Junior Assistants and Librarians.

* 101 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the services of the Ex-Hindi Pandits, now working as Junior Assistants and Librarians are terminated on the date of their attaining superannuation, instead of being continued till the end of the academic year, even though their pay and services were protected under a specific Government order; and

(*b*) if so, the reason therefor?

இளநிலை உதவியாளர்களாகவும் நூலகர்களாகவும் பணியாற்றும் முன்னாள் இந்தி ஆசிரியர்கள்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னாள் இந்தி ஆசிரியர்களாக இருந்து, தற்போது இளநிலை உதவியாளர்களாகவும், நூலகர்களாகவும் பணியாற்றிவருவோரின் சம்பளம், பணி ஆகியவற்றிற்குத் திட்டவட்டமான அரசாணை ஒன்றின்கீழ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தபோதிலும், கல்வியாண்டு இறுதிவரை அவர்கள் தொடர்ந்து பணியில் வைத்துக்கொள்ளப்படுவதற்குப் பதிலாக, பணிமூப்பு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அடையும் தேதியிலேயே அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆசிரியரல்லாத பதவிகளில் பணிபுரியும் முன்னாள் இந்திப் பண்டிதர்கள் வயது முதிர்வடைந்த நாள் முதல் கல்வி ஆண்டு இறுதிவரை பணிபுரிய அனுமதி கோரினால் அவ்வாறே வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறு அனுமதி கோராதவர்கள் வயது முதிர்வடைந்த நாள் முதல் பணியிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அவர்களே விண்ணப்பம் கொடுக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால் இதுபோன்ற உத்தரவு இருக்கின்ற எண்ணமே இல்லை. 1968 ஆம் ஆண்டிலே, இந்த அரசாணை 477-ல் அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கொடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே அவர்கள் தொடர்ந்து இருப்பார்கள் என்று இருக்கிறது. ஆனால் பணிப் பாதுகாப்பு கொடுக்காததாலே, திருச்சி மாவட்டத்தில் பணி நீக்கம் ஆகியிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையிலே ஏதாவது அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 58 வயது வரையிலே அவர்கள் பணிபுரியலாம். மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. டீச்சிங் லைனில் இருப்பவர்கள், சொல்லிக்கொடுக்கின்ற பிரிவிலே இருப்பவர்களுக்கு அந்த ஆண்டிலே தொடர்பில்லாமல், இடையிலே விட்டுவிட முடியாது என்ற அளவில்தான் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஓய்வுக்குப் பிறகு பணி கொடுப்பது என்பது ரீ-எம்ப்ளாய்மெண்ட், எக்ஸ்டென்ஷன் என்பதாகும். இவர்கள் பார்க்கின்ற வேலைகள் பயிற்றுவிக்காத துறையிலே. ஆகவே அவர்கள் அனுமதி கோரினால், வழங்க வேண்டும் என்ற முறை இருக்கிறது. அவர்கள் இதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும். இப்போதாவது தெரிந்துகொள்ள வேண்டும். யார் யார் விண்ணப்பம் போடுகிறார்களோ, அவர்களுக்கு அந்த ஆண்டு இறுதி வரையிலும் கொடுப்பதாக இந்தத் துறையிலே முடிவெடுக்கப்பட்டு, அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. எஸ். கணபதி : அரசினுடைய தீர்மானம் காரணமாக இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் ஆசிரியர்களுக்குக்

கொடுக்கக்கூடிய சிறப்பூதியம், தேர்வுநிலை ஊதியம் வழங்கப்படவில்லை என்று அறிகிறேன். மற்ற பள்ளி ஆசிரியர்களுக்குள்ள எல்லாச் சலுகைகளையும் தொடர்ந்து இவர்களுக்கும் கொடுக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கும் இந்த வசதி வாய்ப்புகள் தரப்படுகின்றன என்றுதான் கருதுகிறேன். எது எது தரப்படவில்லை என்று உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதைப்பற்றி ஆராயலாம்.

English Medium Sections in Schools

* 102 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether only one section in each class is permitted in English medium in each School;

(*b*) whether this has resulted in great over-crowding in these English medium sections ;

(*c*) whether requests have been received for increasing the number of such sections; and

(*d*) if so, the action proposed to be taken thereon?

பள்ளிகளில் ஆங்கில பயிற்று மொழிப் பிரிவுகள்

திரு. கே. எஸ். கணபதி, (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள ஒவ்வொரு வகுப்பிலும் ஒரே ஒரு பிரிவு மட்டும் ஆங்கிலப் பயிற்று மொழி அனுமதிக்கப்படுகிறதா ?

(இ) இதனால் இந்த ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளில் அதிக மாண வர்கள் சேர்ந்து நெரிசலேற்பட்டுள்ளதா ?

(உ) அத்தகைய பிரிவுகளைக் கூடுதலாக்க வேண்டுமென்று வேண்டுகோள் கள் வரப்பெற்றுள்ளனவா ?

(எ) ஆமெனில், அதுகுறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்மொழியல்லாத